வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2210/ஆ4/2024 நாள்:05.06.2024

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு –2024–2025 ஆம் ஆண்டு –21.07.2024 அன்று தேர்வுகள் நடத்துதல் –அறிவுரைகள் வழங்குதல் –சார்பு

பார்வை : அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.005124/ டி(1)/ /2024 நாள் 04.06.2024

===============

அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களின் திறனை கண்டறிவதற்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கான "தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத்தேர்வு" 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை)அன்று நடைபெறவுள்ளது.

அரசு பள்ளிகளில் மாநிலப் பாடத் திட்டத்தின் கீழ் பதினோராம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணபிக்கலாம் என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வில் 1000 மாணாக்கர்கள் (500 மாணவர்கள் , 500 மாணவியர்கள் ) தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவித்தொகை ஒரு கல்வியாண்டிற்கு ரூ.10,000/– (மாதம் ரூ. 1000/– வீதம் ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மட்டும்) இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளின் கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் உள்ள பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் இருதாள்களாக தேர்வு நடத்தப்படும். ஒவ்வொரு தாளிலும் 60 கேள்விகள் இடம்பெறும். முதல் தாளில் கணிதம் தொடர்புடைய வினாக்கள் 60 மற்றும் இரண்டாம் தாளில் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் தொடர்புடைய வினாக்கள் 60 இடம்பெறும்.

எனவே அரசு /நகரவை /ஆதிதிராவிடர்நல மேல்நிலைப்பள்ளிகளில் பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்கள் அறியும் வண்ணம் அறிவிப்பு பலகையில் ஒட்டவும் , நடவடிக்கை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத்தேர்வு 2024–2025 | |
|---|---|
| மாணவர்கள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யும் தேதி | 11.06.2024 to 26.06.2024 |
| மாணவர்கள் விண்ணப்பங்களை பள்ளித்தலைமை ஆசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 26.06.2024 |
| தேர்வுக்கட்டணம் | ரூ.50/– |
| தேர்வு நாள் | 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) |
| முதல் தாள் | காலை (10.00 மணி முதல் 12.00 மணி வரை ) |
| இரண்டாம் தாள் | பிற்பகல் (2.00 மணி முதல் 4.00 மணி வரை ) |

இணைப்பு : 1. பார்வை கடிதம்
2. செய்திக்குறிப்பு

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:
அனைத்து அரசு/நகரவை /ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்:
மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.